சேலம் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட, கல்பகனூரியில் நேற்று (05.02.2025) நடைபெற்ற "மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட திட்ட முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த மோடி அரசுக்கு எதிராக

போச்சம்பள்ளியில் கண்டன பொதுக்கூட்டம்! பி.வில்சன் எம்.பி. - வி.பி.கலைராஜன் சிறப்புரை!

தே.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது!

கிருஷ்ணகிரி, பிப். 7- கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைப்படியும், கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதிஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின்படி ஓர வஞ்சனையான நிதிப் பகிர்வு, தமிழ்நாட்டின் முக்கியத் திட்டங்கள் புறக்கணிப்பு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்குப் பிறகும், எஸ்.எஸ்.ஏ. பேரிடர் மேலாண்மை ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்காதது. ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயரைக் கூட உச்சரிக்காதது என நிதி நிலை அறிக்கையிலும் தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த மோடி அரசைக் கண்டித்து நாளை (08.02.2025 - சனிக்கிழமை), மாலை 5 மணிக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பர்கூர் சட்டமன்ற தொகுதி, போச்சம்பள்ளி பேருந்து நிலையம் அருகே கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தலைமையில் "கண்டன பொதுக் கூட்டம்" நடைபெறஉள்ளது.

இந்த பொதுக் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக தலைமைக் கழக தலைமை சட்ட ஆலோசகர், கழக மூத்த வழக்கறிஞர், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் பி. வில்சன், திராவிட முன்னேற்றக் கழக இலக்கிய அணி மாநில செயலாளர் வி. பி. கலைராஜன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில நிர்வாகிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர், மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர் உள்ளிட்ட நிர்வாகிகள், BLA 2, BLC, கிளைக் கழக செயலாளர்கள், கழகத் தோழர் தோழர்கள் அனைவரும் தவறாமல் பெரும் திரளாக கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டுள்ளார்.

ராணி ஸ்ரீகுமார் எம்.பி. - உடன்குடி தனபால் - ஆண்டாள் பிரியதர்ஷினி சிறப்புரை!

தென்காசி வடக்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம்!

மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

தென்காசி.பிப்.7- தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்த ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் வாசுதேவநல்லூர் பெரியார் திடல் பழைய தீயணைப்பு நிலையம் அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி சீனிவாசன் தலைமையில் வாசுதேவநல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பொன் முத்தையா பாண்டியன், தெற்கு ஒன்றிய செயலாளர் பூசைபாண்டியன் ஆகியோர் முன்னிலையில் நாளை (8.2.2025) நடைபெறுகிறது.

பேரூர் கழக செயலாளர் ரூபி பாலசுப்பிரமணியன் வரவேற்புரை யாற்றுகிறார்.

இப்பொதுக்கூட்டத்தில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ. தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார், மாநில பேச்சாளர்கள் உடன்குடி தனபால், ஆண்டாள் பிரியதர்ஷினி, வாசு முத்துசாமி, சுப்பு ஆகியோர் பங்கேற்று கண்டன உரையாற்றுகின்றனர்.

கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர்கள் தங்கவேல், பரமகுரு தொகுதி பார்வையாளர்கள் தனுஷ் எம் குமார்(வாசுதேவநல்லூர்)ராமஜெயம் (சங்கரன்கோவில்) கழக தீர்மான குழு உறுப்பினர் சரவணன், மருத்துவர் அணி துணைச் செயலாளர் செண்பகவிநாயகம், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துச்செல்வி மாவட்ட அவைத் தலைவர் பத்மநாபன், துணைச் செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை புனிதா, பொருளாளர் சரவணன், பொதுக்குழு உறுப்பினர்கள் வேல்சாமி பாண்டியன், சாகுல் ஹமீது, வெள்ளத்துரை, மாரிசாமி, பா.மரிச்சாமி, தேவதாஸ், பராசக்தி, மகேஸ்வரி, ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன், கடற்கரை, சேர்மதுரை, ராமச்சந்திரன், பால்ராஜ், கிறிஸ்டோபர் வெள்ளத்துரை, குணசேகரன், உள்பட பேரூர் கழகச் செயலாளர்கள், தலைவர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

நிறைவில் மாவட்ட தக வல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் கணேஷ் கண்ணன் நன்றி உரையாற்றுகிறார்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய நிதிநிலை அறிக்கையில்

தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த மோடி அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டம்!

அமைச்சர் கோவி.செழியன் – சு.கல்யாணசுந்தரம் எம்.பி. – திருப்பூர் மனோகர் பாபு கண்டன உரை!

மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர் பிப்.7- தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பினை ஏற்று தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து தஞ்சை மத்திய மாவட்டம் சார்பில் நாளை (08.02.2025) மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளதாக தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிடுள்ள அறிக்கை வருமாறு : தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பினை ஏற்று ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த ஒன்றிய மோடி அரசுக்கு ஏதிராக தஞ்சாவூர் பனகல் கட்டடம் அருகில், நாளை (08.02.2025-சனிக்கிழமை) மாலை 05.00 மணியளவில், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் எம்.பி, திருப்பூர் மனோகர் பாபு ஆகியோர் கண்டன உரையாற்றுகின்றனர்.

அதுசமயம் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதி நிதிகள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழக தொண்டர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

கூத்தாநல்லூர் மேலக்கடை வீதியில் நகரக் கழகம் சார்பில் நகரச் செயலாளர் எஸ்.வி.பக்கிரிசாமி தலைமையில் திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் தெருமுனைப் பிரச்சாரத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் மன்னை சோம.இளங்கோவன், இளம் பேச்சாளர் செல்வி.விக்னேஷ்வரி, துணை அமைப்பாளர் ஜாகீர் உசேன், தங்க.குணசேகரன், பாலமுத்து ஆகியோர் உரையாற்றினர். உடன் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் எஸ்.வி.பி.செந்தில் மற்றும் மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் பக்கிரிசெல்வம், புரோஜிதீன், தேவா, இளைஞர் அணி நகர அமைப்பாளர் ரசின் பைசில் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

நிதிநிலை அறிக்கையா? சதிவலை அறிக்கையா?

"தலைப்புச் செய்தியில் இடம் பிடிப்பதில் இருக்கும் ஆர்வம், களநிலவரத்தைச் சமாளிப்பதிலோ, ஒன்றிய அரசுக்குத் துளியும் இல்லை; அரசியல் கையாலாகாத் தனம் தெளிவாகத் தெரிகிறது, பிரதமர் மோடி மக்களைப் பாதுகாக்கத் தவறி விட்டார்; பொறுப்பற்றுச் செயல்படுகிற ஒன்றிய மோடி அரசு மீண்டும் 2024 இல் வந்தால், இந்தியாவிற்கே பேரழிவு ஏற்படுத்தும்..." என்று ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவரும், பொருளாதார நிபுணருமான பரகலா பிரபாகர் தன் நூலில் (The crooked Timber of new India: Essays on A Republic in Crisis) எழுதி வெளியிட்டார். அதைப் போல முன்னாள் காஷ்மீர் ஆளுநர் சத்திய பால் மாலிக், முன்னாள் சட்ட அமைச்சர் இராம் ஜெத்மலானி போன்றோர் மோடி பற்றியும், மோடி அரசைப் பற்றியும் மிகத் தெளிவாகவே படம் பிடித்து காட்டி எழுதியும், சொல்லியும் இருந்தார்கள். இவை அனைத்தும் உண்மையாக்கும் விதத்தில், இந்திய ஒன்றிய மோடி அரசு செயல்பட்டு வருகிறது.

மேற்கண்ட செய்தியை நிரூபிக்கும் வகையில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்த ஒன்றிய அரசின் 2025 - 2026 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் பீகார், உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட பா. ஜ. க. ஆளும் வட மாநிலங்களுக்கு ஏராளமான வளர்ச்சித் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, அவற்றுக்கான நிதியைத் தாரை வார்க்கப்பட்டு இருக்கிறது. அதே நேரத்தில் தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்கள் அனைத்தும் நளனைக் கைவிட்ட தமயந்தியைப் போல, புறக்கணிப்பு செய்யப்பட்டிருக்கின்றன.

பீகார் மாநிலத்திற்கு வரும் சட்டமன்றத் தேர்தலைக் கணக்கில் கொண்டு இந்த மாபெரும் அறிவிப்பை மோடியின் வாழ்த்தோடு வெளியிட்டு இருக்கிறார்.

வெற்றுச்சொல் அலங்காரங்களும், வஞ்சனையான மேல் பூச்சுகளும் கொண்ட மோடி தலைமையிலான ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை என்றாலே, தமிழ்நாட்டுக்கு ஓரவஞ்சனை தானா? என்று முதல்வர் தளபதி வினாக்கணை தொடுத்துள்ளார்.

கடந்த நிதிநிலை அறிக்கையில் ஆந்திராவுக்கு தனி நிதிச் சலுகை அளித்தது போல, இவ்வாண்டு பீஹாருக்கும் உத்தரபிரதேசத்திற்கும் நிதி அள்ளி விடப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு ஒரு ரூபாய் கொடுத்தால், ஒன்றிய அரசு 29 பைசா தான் திருப்பிக் கொடுக்கிறது. அதே நேரம் பீகார் ஒரு ரூபாய் கொடுத்தால், ஒன்றிய அரசு அதை 7 ரூபாயாக திருப்பிக் கொடுக்கிறது.

மாநிலங்களைச் சமநிலை (Balance) கருதிச் செய்யாமல், மோடி அரசு தமிழ்நாடு போன்ற பிற மாநிலங்களுக்குத் திட்டம் தீட்டுவதிலும் நிதி ஒதுக்குவதிலும் அக்கறை காட்டாமல் மோடி அரசு வஞ்சனை ஏன்? என்று தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி எம்.பி. வினா எழுப்பி இருக்கிறார்.

இதைப் போல மக்களவைக் கழகக் குழுத் தலைவர் டி. ஆர்.பாலு, மாநிலங்களவைக் கழகக் குழுத் தலைவர் திருச்சி என். சிவா எம்.பி. கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், கிரிராஜன், வில்சன், தமிழச்சி தங்கபாண்டியன் போன்றோர் நிதிநிலை அறிக்கைப் பற்றி பல்வேறு விமர்சனங்கள் வைத்துப் பேசியிருக்கிறார்கள்.

கவிஞர்
தமிழ்தாசன்
கழகத் தீர்மானக்குழுத் தலைவர

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (ஜி.டி.பி.) 6.3 முதல் 6.8 விழுக்காடு வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது மிக குறைவான வளர்ச்சி. உணவு பணவீக்கம் 7.5 விழுக்காடுகளில் இருந்து 8.4 விழுக்காடு அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்று பொருளாதார ஆய்வறிக்கை தெரிவித்தாலும், நிதிநிலை அறிக்கையில் இதனைத் கட்டுப்படுத்த, உரிய அறிவிப்புகள் இல்லை ஏன்? விலைவாசி உயர்ந்திருக்கிறது. மக்கள் பொருளை வாங்கும் சக்தி இழந்திருக்கிறார்கள். பணவீக்கம் அதிகமாய் விட்டது.

தமிழ்நாட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் (Gross Domestic Product GDP) தனிநபர் வருமானத்திலும் அதிகமாக இருக்கிறோம்; முதலிடம் காட்டுகிறோம்; தொல்பொருள் ஆராய்ச்சியில் கூட 5,370 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழன் இரும்பைப் பயன்படுத்தி இருக்கிறான் என்பதைக் கூடச் சொல்லிடத் தமிழனின் பெரிய வரலாற்றை ஒன்றிய அரசு மறைத்து விட்டது என்பது மிகப்பெரிய வருத்தத்திற்குரியது அல்லவா? இப்படி ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து திட்டங்கள், பொருளாதார ஒதுக்கீடு என்பதில் தமிழ்நாட்டை வஞ்சனை செய்து கொண்டே இருக்கிறது. இதனை நேர்மையான அரசு என்று எப்படிச் சொல்லவோ, கருதவோ நேரிடும்? இது ஒரு கண்ணுக்கு வெண்ணெய்; ஒரு கண்ணுக்கு சுண்ணாம்புதானே? இப்படிப்பட்ட நிர்மலா சீதாராமனின் நிதிநிலை அறிக்கை ஏற்புடையதா ?

ஒன்றிய அரசின் நிதி தொகுப்புக்கு, தமிழ்நாட்டில் இருந்து அதிக வரி வருவாய் கிடைக்கும் நிலையிலும், தொடர்ந்து தமிழ்நாட்டுக்கு பகிர்ந்து அளிக்கப்படும் நிதியின் அளவு ஓரவஞ்சனையுடன் குறைவாக இருந்து வருகிறது. தற்போது, ஒன்றிய அரசு நிதி நிலை அறிக்கையிலும் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. மாநிலங்களுக்கு நிதி ஒதுக்குவதில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகிறது என்று தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களும், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களும் அவ்வப்போது, சட்டமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் அறிக்கைகள் வாயிலாக வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

சமக்ரா சிக்ஷா அபியான் திட்டத்திற்கு தர வேண்டிய 2000 கோடி ரூபாய் ஒன்றிய அரசு இன்னும் விடுவிக்கவில்லை. கலைஞர் வீடு கட்டும் திட்டத்தில் மாநில அரசின் சொந்த நிதியில் இருந்து கூடுதல் தொகை கொடுக்கப்படுகிறது. பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில் தமிழ்நாடு அரசால் அதிகமான நிதி கொடுக்கப்படுகிறது. தமிழ் புதல்வன், நான் முதல்வன், புதுமைப்பெண், மகளிர் உரிமைத் தொகை, காலை உணவு என அனைத்து திட்டங்களுக்கும் தமிழ்நாடு அரசு சொந்த நிதியைத்தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நமக்குள்ள வருவாய்களிலிருந்து தான், திட்டமிடும் காரணத்தால் செயல்படுத்தப்படுகிறது.

2010 ஆம் ஆண்டில் ஏழைகளுக்கு கலைஞர் வீடு கட்டும் திட்டத்தில் 60 ஆயிரம் ரூபாய் மட்டுமே கொடுக்கப்பட்டது. ஆனால் அதனை தளபதி மு.க. ஸ்டாலின் அரசு தற்போது 14 மடங்கு உயர்த்தி, 3,50,000 ரூபாய் கொடுக்கிறது. பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தில் ஒரு வீட்டிற்கு ஒன்றிய அரசு நிர்ணயத்துள்ள தொகை ரூபாய் 1 இலட்சத்து 20,000 மட்டுமே. ஆனால், எட்டு ஆண்டு காலமாக ஒன்றிய அரசு அதனை உயர்த்தித் தந்திட முன்வரவில்லை. இந்தத் திட்டத்தில் பயனாளிகளுக்கு 2,82,000 கொடுக்கப்பட்டு வருகிறது. இதில் தமிழ்நாடு அரசின் பங்கு மட்டும் 1,72,000 ரூபாய். பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில் கூட, தளபதி அரசு தான் 60% நிதியைத் வழங்கி வருகிறது.

உத்தரபிரதேசத்திற்கு மட்டும் 31,039 கோடி ரூபாய் நிதி சென்றுள்ளது. மத்திய பிரதேசத்திற்கு 13,582 கோடி ரூபாய் வழங்கி உள்ளனர். இப்படி உ.பி., ம.பி, பீகார் போன்ற பி. ஜே.பி. ஆளும் மாநிலங்களுக்கு மொத்த நிதி பகிர்வாக 40% அளவிற்கு வழங்கி உள்ளார்கள். ஆனால், தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகம், ஆகிய மாநிலங்களுக்கு மொத்த நிதிப் பகிர்வில் 15% மட்டுமே கிடைத்துள்ளது. ஒட்டுமொத்தமாக மேற்கண்ட 4 மாநிலங்களுக்குச் சேர்த்து ஒன்றிய அரசு 27,310 கோடி ரூபாய் மட்டும் தான் நிதிப்பகிர்வாக தந்துள்ளது. தமிழ்நாட்டுக்கு மட்டும் 37,907 கோடி ரூபாய் ஒன்றிய அரசிடம் கேட்டும், வெறும் ரூபாய் 776 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

மோடி ஆட்சியின் தவறான போக்கால், மாநில புலனாய்வு நிறுவனங்களைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகள் அடக்கப்படுவதும், மாநில உரிமைகள் பறிக்கப்படுவதும், ஆளுங்கட்சிக்கு ஆதரவான பெரும் முதலாளி நிறுவனங்களுக்குத் தேசிய சொத்துக்களைத் தாரை வார்ப்பதாகதான் நடந்து வருகிறது. நிர்மலா சீதாராமன் வாசித்த நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளஆயுள் காப்பீட்டுத் துறையில் 74% லிருந்து 100% அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கும் முடிவானது என்பது, இந்தியாவின் விலைமதிப்பற்ற வளங்களைச் சூறையாடுவதற்கும், சுரண்டுவதற்கும் வழிவகுக்கும் என்பதோடு, இது இந்திய மக்கள் நலனுக்கு எதிரான, கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

வேளாண்மை மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் உள்ளிட்ட விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கை பற்றி இந் நிதிநிலை அறிக்கையில் கவனம் செலுத்தப்படவில்லை. மாறாக, கார்ப்பரேட் முதலாளிகளுக்குப் பெரும் இலாபத்திற்கான நிதிநிலையாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நகர்ப்புறங்களில் சிறு, குறு தொழில்கள் முடக்கப்பட்டு மூடப்படும் அவல நிலையில் தள்ளப்பட்டிருக்கின்றன. வேலையின்மை நெருக்கடி தீவிரமடைந்து, ஏழை, எளிய மக்கள் வாழ்க்கை நடத்த முடியாத பெரும் துயரச்சூழ்நிலையைச் சந்தித்து வருகிறார்கள். கிராமப்புற மக்களுக்கு ஆறுதலாக இருக்கும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தை முடக்கும் விதத்தில், அதற்கான போதிய நிதியை ஒதுக்காமல் கடந்த 10 ஆண்டுகளாக பா.ஜ.க. அரசு முடக்கி வைத்துள்ளது.

தமிழகத்திற்கு தரவேண்டிய நிலுவைத் தொகை ரூபாய் 1,635 கோடியை ஒன்றிய அரசு இன்னும் விடுவிக்கவில்லை. இது கிராம மக்கள் மீது பா.ஜ.க. அரசு தொடுத்துள்ள கடுமையான தாக்குதலாகும். உலகப் பட்டினி குறியீட்டில் 105 ஆவது, இடத்திற்கு பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் இந்தியா தள்ளப்பட்டுள்ளது. உணவு பாதுகாப்பு உறுதிப்படுத்த வேண்டிய அரசு, உணவு மானியத்தை கடந்த ஆண்டை விட ரூ.2,250 கோடியாக குறைத்துச் சாமானிய மக்களின் வயிற்றில் அடித்துள்ளது. நாட்டின் முதுகெலும்பாகத் திகழும் விவசாயிகளின் உரமானியம், பயிர்க்கடன், அளவு குறைக்கப்பட்டும் பெட்ரோல், டீசல் விலை, மின்சார உற்பத்தி பொருட்கள் விலை உயர்த்தப்பட்டும் உள்ளன. குறைந்தபட்ச ஆதார விலை கேட்டு நான்கு ஆண்டுகள் போராட்டம் நடத்தியபோதும் அதற்கான உறுதி அளிக்கப்படவில்லை.

தேசிய பணமாக்கல் திட்டத்தின் (NMP), அடிப்படையில், அடுத்த ஐந்து ஆண்டுகள் 10 இலட்சம் கோடி திரட்ட இலக்கு நினைக்கப்பட்டுள்ளதால் இதன் மூலம் மின் துறை, எண்ணெய், நிலக்கரி, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட அனைத்து விதமான முக்கிய பொதுத் துறை நிறுவனங்களையும் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு மோடி அரசு தனியார்மயமாக்கும் சூழ்ச்சியாகும்.

பொருளாதார மந்த நிலையைச் சரி செய்ய எந்தத் திட்டமும் இல்லாத ஒரு கார்ப்பரேட் அறிக்கை. மோடி அரசு பணக்காரர்களுக்கும் பெரும் நிறுவனங்களுக்கும் சிவப்புக் கம்பளம் விரித்து, அவர்களின் நலன் சார்ந்து கொண்டு வரப்பட்டதுதான் இந்த நிதிநிலை அறிக்கை. சாமானிய மக்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட தாக்குதலாகும்.

இந்நிலையில் தான், தொடர்ந்து ஓரவஞ்சனையான நிதிப்பகிர்வு; தமிழ்நாட்டின் முக்கிய திட்டங்கள் புறக்கணிப்பு; தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்குப் பிறகும் எஸ்.எஸ்.ஏ பேரிடர் மேலாண்மை ஆகியவற்றிற்கு நிதி ஒதுக்காதது; ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் தமிழ் நாடு என்ற பெயரைக் கூட உச்சரிக்காதது இப்படியாகத் தொடர்ந்து தமிழ்நாட்டை . வஞ்சித்து வரும் மோடி அரசைக் கண்டித்து, தமிழ்நாடு முழுவதும் வருகிற பிப்ரவரி 8 சனிக்கிழமைஅன்று மாலை தமிழ்நாடு முழுதும் கழகத்தின் சார்பில் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற அறிவிக்கப்பட்டிருக்கிறது. அண்ணாவின் அறவழியில், கலைஞரின் களத்தில், தளபதி தலைமையில் வீறு நடை போடுவோம்! நிதிநிலை அறிக்கையா? சதிவலை அறிக்கையா? எனக் கண்டன முழக்கம் செய்வோம்! மோடி அரசின் முகமூடியைக் கிழிப்போம்!

"தமிழ்நாட்டுக்கான திட்டங்கள் ஏதும் இல்லாததும், தமிழ்நாடு என்ற பெயர் கூட இடம் பெறாததும், பாசிஸ்டுகளுக்குத் தமிழ்நாட்டின் மீது இருக்கின்ற வன்மத்தையும் அவர்களின் மாற்றாந் தாய் மனப்பான்மையை வெளிச்சம் போட்டு காட்டுகிறது. இதன் மூலம் தமிழ்நாடும், மக்களும் பாசிஸ்டுகளை நிராகரித்துக் கொண்டே இருப்பார்கள்" என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தன் கருத்தைப் பதிவு செய்திருக்கிறார்.